This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

# சுராவின்

பொதுத்தேர்வு பதிப்பு (2021-22)

# தமிழ் உரைநூல்

## 10 ஆம் வகுப்பு

தமிழ்நாடு அரசு (13–8–2021) G.O. (Ms). No. 126) அன்று வெளியிட்டுள்ள குறைக்கப்பட்ட (முன்னுரிமை) பாடதிட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்**

மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம். கூடுதல் வினா – விடைகள், பொருள் தருக, பிரித்து எழுதுக, இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், இலக்கிய நயம் பாராட்டல், மொழியாக்கம், கடிதம் எழுதுதல், பொதுக் கட்டுரைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

பொதுத்தேர்வு மாதிரி வினாத்தாள்–(2021–22) குறைக்கப்பட்ட பாடங்களின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

**2021-22 பதிப்பு**
© வெளியீட்டாளர்கள்

ISBN : **978-93-5330-404-1**
**குறியீட்டு எண் : RPS_001**

**எழுதி வழங்கியவர்கள்**
**செ. சசிகலாதேவி,** M.A., M.Phil.,(Tamil) PGDLA
**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-4862 9977, 486 27755
81242 01000/ 81243 01000
வாட்ஸ்அப்: 8124201000
**e-mail :** orders@surabooks.com,
**website :** www.surabooks.com

- Sura's Tamil
- Sura's English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available 1 Mark Q & A (EM/TM),2,3 Marks (EM/TM) and 5 Marks Q & A (EM / TM) for all Subjects.

# பதிப்பாசிரியர் உரை

**எங்கள் வாழ்த்திற்குரிய இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். குறைக்கப்பட்ட (முன்னுரிமை) பாடத்திட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பத்தாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

**மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.**
**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .** - பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 80562 94222 / 80562 15222
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


மனப்பாடச் செய்யுள் பகுதி ........................................................ 1-3

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி<br>அமுத ஊற்று | அன்னை மொழியே! (செய்யுள்)<br>தமிழ்ச்சொல் வளம் (உரைநடை)<br>எழுத்து, சொல் (இலக்கணம்) | 4-21 |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல்<br>உயிரின் ஓசை | காற்றே வா! (செய்யுள்)<br>தொகைநிலைத் தொடர்கள் (இலக்கணம்) | 22-33 |
| 3. | பண்பாடு<br>கூட்டாஞ்சோறு | கோபல்லபுரத்து மக்கள் (துணைப்பாடம்)<br>தொகாநிலைத் தொடர்கள் (இலக்கணம்)<br>திருக்குறள் (செய்யுள்) | 34-52 |
| 4 | அறிவியல், தொழில்நுட்பம்.<br>நான்காம் தமிழ் | பெருமாள் திருமொழி (செய்யுள்)<br>இலக்கணம் - பொது (இலக்கணம்) | 53-63 |
| 5 | கல்வி<br>மணற்கேணி | நீதிவெண்பா (செய்யுள்)<br>வினா விடை வகை, பொருள்கோள் (இலக்கணம்) | 64-75 |
| 6. | கலை, அழகியல், புதுமைகள்<br>மணற்கேணி | கம்பராமாயணம் (செய்யுள்)<br>அகப்பொருள் இலக்கணம் (இலக்கணம்)<br>திருக்குறள் (செய்யுள்) | 76-91 |
| 7. | நாகரிகம், நாடு, சமூகம்<br>**விதைநெல்** | சிற்றகல் ஒளி(தன் வரலாறு) (உரைநடை)<br>மெய்க்கீர்த்தி (செய்யுள்)<br>சிலப்பதிகாரம் (செய்யுள்)<br>மங்கையராய்ப் பிறப்பதற்கே... (துணைப்பாடம்)<br>புறப்பொருள் இலக்கணம் (இலக்கணம்) | 92-119 |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை<br>**பெருவழி** | சங்க இலக்கியத்தில் அறம் (உரைநடை)<br>காலக்கணிதம் (செய்யுள்)<br>இராமானுசர் (நாடகம்) (துணைப்பாடம்)<br>பா-வகை, அலகிடுதல் (இலக்கணம்) | 120-144 |
| 9. | மனிதம், ஆளுமை<br>**அன்பின் மொழி** | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) (உரைநடை)<br>தேம்பாவணி (செய்யுள்)<br>ஒருவன் இருக்கிறான்<br>அணிகள் (இலக்கணம்) | 145-170 |
| **மொழித்திறன் பயிற்சிகள்**<br>பொருள் தருக, பிரித்து எழுதுக, இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், இலக்கிய நயம் பாராட்டல், மொழியாக்கம், கடிதம் எழுதுதல், பொதுக் கட்டுரைகள். | | | 171-208 |
| சுராவின் மாதிரி வினாத்தாள் 2021-22 | | | 209-212 |

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 80562 94222 / 80562 15222

## DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **36550290536** | Our A/c No. : **21000210001240** |
| Bank Name : **STATE BANK OF INDIA** | Bank Name : **UCO BANK** |
| Bank Branch : PADI | Bank Branch : Anna Nagar West |
| IFSC : SBIN0005083 | IFSC : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **6502699356** | Our A/c No. : **1154135000017684** |
| Bank Name : **INDIAN BANK** | Bank Name : **KVB BANK** |
| Bank Branch : ASIAD COLONY | Bank Branch : Anna Nagar |
| IFSC : IDIB000A098 | IFSC : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
**email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS

Order via Money Order (M/O) to


**SURA PUBLICATIONS**
**1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,**
**Chennai - 600 040.**
**Phones : 044-48629977, 48627755.**
**Mobile : 80562 94222/ 80562 15222.**
**email : orders@surabooks.com Website : www.surabooks.com**




www.surabooks.com

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

இயல் - 1

## அன்னை மொழியே

### அழகார்ந்த செந்தமிழே!

### கனிச்சாறு (தொகுதி–1)

பிடிஏ–4, 6; அரையாண்டுத் தேர்வு 2019

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

பிடிஏ–1

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

இயல் - 3

## திருக்குறள்

குறள் எண்

### மெய் உணர்தல்(36)

4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

### பெரியாரைத் துணைக்கோடல்(45)

பிடிஏ–4,5

8. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

### கண்ணோட்டம்(58)

அ.மா.வி 2019; பிடிஏ–2

11. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல்; கண்ணென்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

### ஆள்வினை உடைமை(62)

14. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

காலாண்டுத் தேர்வு 2019

16. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

– திருவள்ளுவர்

இயல் - 4

## பெருமாள் திருமொழி

அ.மா.வி 2019; காலாண்டுத் தேர்வு 2019

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

பாசுர எண் : 691 – குலசேகராழ்வார்

www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



இயல் - 5

## நீதிவெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

- கா.ப. செய்குதம்பிப் பாவலர்

இயல் - 6

## கம்பராமாயணம்

**பாலகாண்டம் – நாட்டுப்படலம்**

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்,
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்,
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ. பா.எண். 35

**அயோத்தியா காண்டம் – கங்கைப்படலம்**

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான். பா.எண். 1926

- கம்பர்

## திருக்குறள்

### அமைச்சு(64)

குறள் எண்

அ.மா.வி 2019; பிடிஏ–1

4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.

### பொருள்செயல் வகை(76)

5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

### குடிசெயல் வகை(103)

பிடிஏ–6

14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

### நல்குரவு(105)

15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

- திருவள்ளுவர்

இயல் - 7

## சிலப்பதிகாரம்

**மருவூர்ப் பாக்கம்**

அரையாண்டுத் தேர்வு 2019; பிடிஏ–1,6

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்; இந்திரவிழா ஊரெடுத்த காதை(அடி 18–23)

- இளங்கோவடிகள்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



இயல் - 8

## காலக்கணிதம்

பிடிஏ–3

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

– **கண்ணதாசன்**

இயல் - 9

## தேம்பாவணி

**இயற்கை கொண்ட பரிவு**

அ.மா.வி 2019; பிடிஏ–2

நவமணி வடக்க யில்போல்
    நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
    தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
    துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
    ஒலித்து அழுவ போன்றே.

பா எண் : 2410

– **வீரமாமுனிவர்**

★ ★ ★

www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores

மொழி - அமுதஊற்று | கவிதைப்பேழை

இயல் 1

# அன்னை மொழியே

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## கற்பவை கற்றபின்

1. **''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை''**
**இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத் தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

(i) **நற்றிணை :** நல் + திணை / நன்மை + திணை. 'நல்' என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் 'திணை' என்னும் பெயரும் சேர்ந்து 'நற்றிணை' என்னும் பெயர் பெற்றது.

(ii) **குறுந்தொகை :** குறுமை + தொகை. குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் குறுந்தொகை எனப் பெயர்பெற்றது.

(iii) **ஐங்குறுநூறு :** ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைத் திணை குறித்த குறுகிய நூறு பாடல்களாகத் தொகுக்கப்பட்டதால் 'ஐங்குறுநூறு' எனப் பெயர் பெற்றது.

(iv) **பதிற்றுப்பத்து :** சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். ஒரு மன்னருக்குப் பத்துப் பாடல்கள் என்னும் முறையில் நூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் 'பதிற்றுப்பத்து' எனப் பெயர் பெற்றது.

(v) **பரிபாடல் :** வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பல வகை அடிகளுக்கும் பரிந்து இடங்கொடுத்து பரிந்து செல்லும் ஓசையையுடைய பரி பாட்டுகளின் தொகுப்பாக விளங்குவதால் இது 'பரிபாடல்' என்று அழைக்கப்படுகிறது.

(vi) **கலித்தொகை :** ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளையும், கொண்ட கலிப்பாக்களால் அமைந்த நூலாதலால் கலித்தொகை எனப் பெயர் பெற்றுள்ளது.

(vii) **அகநானூறு :** அகம் + நான்கு + நூறு – அகநானூறு. அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் 'அகநானூறு' எனப் பெயர் பெற்றது.

(viii) **புறநானூறு :** புறம் + நான்கு + நூறு – புறநானூறு. இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் 'புறநானூறு' எனப் பெயர் பெற்றது.

2. **''எந்தமிழ் நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்'' என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்து நிமிட உரை நிகழ்த்துக.**

உலகில் உள்ள தொன்மையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று என்றால் மிகையாகாது. இன்றும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் தன் தொன்மையைக் காத்து சீரும் சிறப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கிறது நம் தமிழ் மொழி.

தமிழ்மொழி தொன்மை, எளிமை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை எனப் பலவகை பெருமைகளை ஒருங்கேயுடையது என்கிறார் ஞா.தேவநேயப் பாவாணர்.

முண்டாசு கவிஞன் மகாகவி பாரதி அவர்கள்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்" என்றார்.

அந்தளவிற்குத் தமிழ்மொழியின் பெருமையை உலகறியும். மேலும் தமிழ்மொழி இயற்கையாகவே பேசுவதற்கு எளிமையாக அமைந்திருப்பதால் நாம் தமிழ் எழுத்துகளை எளிதாக உச்சரிக்கலாம்.

தமிழின் சிறப்பை உணர்ந்த மேலைநாட்டு அறிஞர் டாக்டர் ஜி.யூ.போப்., தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால் தமது கல்லறையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்று பொறிக்கச் செய்தார்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



உலகின் மூத்த மொழி தமிழ்மொழி. மூத்தக்குடி வளர்த்த மொழியாம் தமிழ்மொழி மற்ற மொழிகளைக் காட்டிலும் இனிமையும், பெருமையும் பல்வேறு இலக்கிய தொன்மைகளையும் இயல், இசை, நாடகம் என்று முத்தமிழ் கொண்ட மொழியாம் நம் தமிழ் மொழி, தமிழ்மொழிக்கு ஈடு இணை இவ்வுலகில் எந்த மொழியும் இல்லையென பெருமையாக எடுத்துரைப்பேன்.

எந்தன் தமிழின் பெருமையை உலக அரங்கு முழுக்க எடுத்துரைப்பேன் அதுவே நான் செய்த பாக்கியம் என்று பலரும் கூறுகின்றனர்.

## அரசு தேர்வு வினாக்கள்

**1. "அன்னை மொழியே'' கவிதை இடம் பெறும் நூல்** — காலாண்டுத் தேர்வு 2019

அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை ஈ) பாவியக்கொத்து

**விடை ஆ) கனிச்சாறு**

**2. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?** — காலாண்டுத் தேர்வு 2019

அ) பாவாணர் ஆ) கால்டுவெல்
இ) இரா. இளங்குமரனார் ஈ) திரு.வி.க

**விடை ஆ) கால்டுவெல்**

### குறுவினா

**1. "மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!** — அ.மா.வி 2019
**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!''**
**மண்ணுலகப் பேரரசு ....... தென்னன் மகள் ....... திருக்குறளின் மாண்புகழ் ......... மூன்று இடங்களுக்குமான ஒரே விடை என்ன? பாடலின் ஆசிரியர் யார்?**

(i) செந்தமிழ் (ii) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**2. அன்னை மொழியான தமிழை வாழ்த்தும் வாழ்த்துச் சொற்கள் இரண்டினை எழுதுக.** — காலாண்டுத் தேர்வு 2019

(i) பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே, பாண்டிய மன்னனின் மகளே!

(ii) திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே! இனிமையான பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளுடன் தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

**1. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர்**

அ) துரை.மாணிக்கம் ஆ) தி. இராசகோபாலன்
இ) துரைராசு ஈ) எத்திராசலு

**விடை அ) துரை.மாணிக்கம்**

**2. 'தென்னன் மகளே!' இத்தொடரில் தென்னன் என்பவர்**

அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்

**விடை இ) பாண்டியன்**

**3. பெருஞ்சித்திரனாரின் எந்தப் படைப்பு தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது?**

அ) உலகியல் நூறு ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
இ) கனிச்சாறு ஈ) எண்சுவை எண்பது

**விடை ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை**

**4. "என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்'' என்று கூறியவர்**

அ) ஜி.யு. போப் ஆ) கால்டுவெல்
இ) க.சச்சிதானந்தன் ஈ) ப.சிங்காரம்

**விடை இ) க.சச்சிதானந்தன்**

**5. 'கனிச்சாறு' என்ற கவிதை நூலைப் படைத்தவர்**

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) தாராபாரதி
இ) வாணிதாசன் ஈ) முடியரசன்

**விடை அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**6. செந்தமிழ் என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்**

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்
இ) செம்மை + தமிழ் ஈ) செ + தமிழ்

**விடை இ) செம்மை + தமிழ்**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



**7. 'தும்பி' என்பதன் பொருள்**
அ) வண்ணத்துப்பூச்சி ஆ) தேனீ இ) தட்டான்பூச்சி ஈ) வண்டு **விடை ஈ) வண்டு**

**8. செந்தாமரை என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்**
அ) செந் + தாமரை ஆ) செம் + தாமரை
இ) சிவப்பு + தாமரை ஈ) செம்மை + தாமரை **விடை ஈ) செம்மை + தாமரை**

**9. தமிழன்னையின் மாண்புகழாகக் கவிஞர் வருணித்த நூல் எது?**
அ) திருக்குறள் ஆ) பத்துப்பாட்டு இ) எட்டுத்தொகை ஈ) சிலப்பதிகாரம் **விடை அ) திருக்குறள்**

**10. பாவலரேறு பெருஞ்சித்திரனார் கீழ்க்கண்ட எந்த இதழ்கள் வாயிலாக தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்?**
அ) தென்மொழி, தென்றல் ஆ) தமிழ்ச்சிட்டு, குயில்
இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஈ) நவபாரதி, குயில் **விடை இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு**

## குறுவினா

**1. பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் யாவை?**
**பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள்:** உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, ஐயை, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலியன.

**2. பெருஞ்சித்திரனார் எமக்குயிர் என எதனைக் கூறுகிறார்?**
பெருஞ்சித்திரனார் தமிழே எமதுயிர் எனக் கூறுகிறார்.

**3. வண்டைப் போல் நாம் என்ன செய்வதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?**
செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடும் வண்டைப் போல நாம் தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை முழங்குவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**4. அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள் யாவை?**
**அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள் :** திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை.

**5. தமிழ் எவற்றோடு இணைத்துப் பேசப்படுகிறது?**
விண்ணோடும், முகிலோடும், உடுக்களோடும், கதிரவனோடும், கடலோடும் தமிழ் இணைத்துப் பேசப்படுகிறது.

**6. தமிழ் எவ்வாறு வளர்ந்தது?**
தமிழ், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாய் வளர்ந்தது.

**7. பெருஞ்சித்திரனார் அன்னை மொழியை வாழ்த்தும் விதத்தை எழுதுக.**
அன்னையே மொழியே! அழகாய் அமைந்த செழுந்தமிழே! பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்.

☆ ☆ ☆

www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



இயல் 1

# தமிழ்ச்சொல் வளம்

- தேவநேயப் பாவாணர்

## கற்பவை கற்றபின்

**1. பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.**

தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்.

(i) தரிசு – சாகுபடி செய்யப்படாமல் கிடக்கும் நிலம்.
(ii) சிவல் – சிவப்பு நிறமாக இருக்கும் நிலம்.
(iii) கரிசல் – கருப்பு நிறம் கொண்ட மண் உள்ள நிலம்.
(iv) முரம்பு – பருக்கை கல்லுள்ள மேட்டு நிலம்
(v) புறம்போக்கு – அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களைப் புறம்போக்கு என்பர்.
(vi) சுவல் – மேடான பகுதியிலுள்ள நிலம்
(vii) அவல் – பள்ளமான பகுதியிலுள்ள நிலம்

**2. ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.**

எ.கா. : சொல்லுதல் – பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்புதல், மொழிதல்
(i) கிளி – தத்தை, சுகம், கிள்ளை
(ii) குழந்தை – மகவு, குழவி, சேய், பிள்ளை
(iii) சூரியன் – ஞாயிறு, கதிரவன், பகலோன், பரிதி
(iv) நெருப்பு – தீ, அனல், கனல், சுடர்
(v) சொல் – பதம், கிளவி, மொழி
(vi) பெண் – நங்கை, மங்கை
(vii) வயல் – கழனி, தரிசு, பழனம், செய், காணி.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்.** பிடிஏ–2

அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார்

**விடை ஈ) இரா. இளங்குமரனார்**

**விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

**1. ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.** பிடிஏ–3

மக்களின் அறிவொழுக்கங்கள் எவ்வாறு அமைந்திருக்கும்?

**2. சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.** பிடிஏ–3

சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?

**குறுவினா**

**1. தமிழ்ச்சொல் வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.** பிடிஏ–1

தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்கிறார் கால்டுவெல்.

**2. தமிழ்நாட்டு நெல்வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.** அ.மா.வி 2019

தமிழ்நாட்டு நெல்லில் செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



3. **தாவரத்தின் நுனிப் பகுதிகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?** காலாண்டுத் தேர்வு 2019

தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்களைக் கொழுந்து என்கிறோம்.

| | |
|---|---|
| நெல், புல் | – துளிர் (அ) தளிர் |
| புளி, வேம்பு | – முறி (அ) கொழுந்து |
| சோளம், கரும்பு, தென்னை, பனை | – குருத்து |
| கரும்பின் நுனிப் பகுதி | – கொழுந்தாடை எனப்படும். |

4. **பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார் குறித்து எழுதுக.** அரையாண்டுத் தேர்வு 2019

குமரி மாவட்டம் ஆரல்வாய் மொழியில் 24-6-1907இல் பிறந்தார். தமிழ்நாட்டு மொழியியல் வல்லுநர்களுள் ஒருவர். பன்மொழிப்புலவர் எனப் பெயர் பெற்றவர். **இவர் எழுதிய நூல்கள்:** குமரிக் கண்டம், தென்னாட்டுப் போர்க்களங்கள்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **கீழ்கண்டவற்றில் அடிவகையைக் குறிக்கும் சொல் எது?**
அ) தாள் ஆ) கவை இ) தோகை ஈ) துளிர் **விடை அ) தாள்**

2. **குருத்து என்பது**
அ) கிளைப்பிரிவு ஆ) அடிவகை இ) இலை வகை ஈ) கொழுந்து வகை
**விடை ஈ) கொழுந்து வகை**

3. **கச்சல் என்பது**
அ) வாழைப்பிஞ்சு ஆ) மாம்பிஞ்சு இ) பலாப்பிஞ்சு ஈ) என் பிஞ்சு **விடை அ) வாழைப்பிஞ்சு**

4. **உலகத்திலேயே ஒரு மொழிக்காக (தமிழ்) உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?**
அ) தமிழ்நாடு ஆ) இலங்கை இ) மலேசியா ஈ) சிங்கப்பூர் **விடை இ) மலேசியா**

5. **இரா. இளங்குமரனார் திருவள்ளுவர் தவச்சாலை மற்றும் பாவாணர் நூலகத்தை எந்த ஊரில் அமைந்துள்ளார்**
அ) பெரம்பலூர் ஆ) ஜெயங்கொண்டம்
இ) அல்லூர் ஈ) தஞ்சாவூர் **விடை இ) அல்லூர்**

6. **இரா. இளங்குமரனார் இமைகளை மூடியபடி எழுதுவதற்கு யாரை முன்னோடியாகக் கொண்டார்?**
அ) தேவநேயப் பாவாணர் ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க.
இ) க.அப்பாத்துரையார் ஈ) பெருஞ்சித்திரனார் **விடை ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

7. **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்**
அ) தேவநேயப் பாவாணர் ஆ) உ.வே. சாமிநாதர்
இ) திரு.வி.கல்யாண சுந்தரனார் ஈ) இரா.பி.சேதுப்பிள்ளை **விடை அ) தேவநேயப் பாவாணர்**

8. **தேவநேயப் பாவாணரின் சிறப்புப் பெயர் எது?**
அ) சொல்லின் செல்வர் ஆ) மொழிஞாயிறு
இ) தமிழ்த்தென்றல் ஈ) இரண்டாம் நக்கீரர் **விடை ஆ) மொழிஞாயிறு**

9. **“நாடும் மொழியும் நமதிரு கண்கள்” என்று கூறியவர்**
அ) ஜி.யு. போப் ஆ) கால்டுவேல்
இ) பாரதியார் ஈ) ப.சிங்காரம் **விடை இ) பாரதியார்**

10. **’தமிழ்ச்சொல் வளம்’ என்ற கட்டுரையின் ஆசிரியர்**
அ) இலக்குவனார் ஆ) இரா.பி.சேதுப்பிள்ளை
இ) மு.வரதராசனார் ஈ) தேவநேயப் பாவாணர் **விடை ஈ) தேவநேயப் பாவாணர்**

**குறுவினா**

1. **இரா. இளங்குமரனார், யாரைப் போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றிருந்தார்?**
இரா. இளங்குமரனார், தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றிருந்தார்.

2. **எதனை இழக்கக் கூடாதென்று இரா.இளங்குமரனார் கூறுகிறார்?**
விழிகளை இழக்க நேரிட்டாலும் தாய்த்தமிழை இழக்கக் கூடாதென்று இரா. இளங்குமரனார் கூறுகிறார்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



**3. காய்ந்த தாவர வகைகள் எவ்வாறு பெயர் பெறுகின்றன?**

காய்ந்த குச்சு **சுள்ளி** எனவும், சிறுகிளை **விறகென**வும், காய்ந்த கழி **வெங்கழி**யெனவும் காய்ந்த கொம்பும், கவையும், அடியும் **கட்டை** எனவும் பெயர் பெறுகின்றன.

**4. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

புளி, வேம்பு இவற்றின் இலை, **இலை** எனவே வழங்கப்படுகிறது. நெல், புல் இவற்றின் இலை **தாள்** எனவும், சோளம், கரும்பு இவற்றின் இலை **தோகை** எனவும், தென்னை, பனை இவற்றின் இலை **ஓலை** எனவும், காய்ந்த தாளும், தோகையும் **சண்டெ**னவும், காய்ந்த இலை **சருகு** எனவும் வழங்கப்பெறும்.

**5. பூவின் நிலைகளை எழுதுக.**

பூவின் தோற்ற நிலை **அரும்பு** எனவும், பூவிரியத் தொடங்கும் நிலை **போது** எனவும், பூ மலர்ந்த நிலை **மலர்** அல்லது **அலர்** எனவும், மரஞ்செடியிலிருந்து பூ கீழே விழுந்த நிலை **வீ** எனவும், பூ வாடிய நிலை **செம்மல்** எனவும், பூவின் நிலைகள் குறிக்கப்படுகின்றன.

**6. தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் பெயர்களை எழுதுக.**

பூவோடு கூடிய இளம்பிஞ்சு பூம் பிஞ்சு எனவும், இளங்காய் பிஞ்சு எனவும், மாப்பிஞ்சு வடு எனவும், பலாப்பிஞ்சு மூசு எனவும், தென்னை, பனை முதலியவற்றின் இளம்பிஞ்சு குரும்பை எனவும், சிறுகுரும்பை முட்டுக் குரும்பை எனவும், முற்றாத தேங்காய் இளநீர் எனவும், இளம்பாக்கு நுழாய் எனவும், இளநெல் கருக்கல் எனவும், வாழைப்பிஞ்சு கச்சல் எனவும் வழங்கப்படுகிறது.

**7. பழத்தோல் வகைகளுக்கான பெயர்களை எழுதுக.**

**பழங்களின் மேற்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்:** மிக மெல்லிய மேற்பகுதி தொலி, திண்ணமானது தோல், வன்மையானது தோடு, மிக வன்மையானது ஓடு, சுரையின் ஓடு குடுக்கை, தேங்காய் நெற்றின் மேற்பகுதி மட்டை, நெல், கம்பின் மூடி உமி, வரகு, கேழ்வரகு இவற்றின் உமி கொம்மை எனப் பல்வேறு பெயர்களால் குறிக்கப்படுகிறது.

**8. தானிய மணிகளுக்கு வழங்கும் பெயர்களை எழுதுக.**

(i) நெல், கம்பு முதலியவை கூலம் என வழங்கப்படும்.
(ii) அவரை, உளுந்து முதலியவை பயறு எனப்படும்.
(iii) வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை கடலை எனப்படும். கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து விதை எனப்படும்.
(iv) புளி, காஞ்சிரை இவற்றின் வித்து காழ் என்றும், வேம்பு, ஆமணக்கு இவற்றின் வித்து முத்து என்றும் அழைக்கப்படும்.
(v) மா, பனையின் வித்து கொட்டையாகும். தென்னையின் வித்து தேங்காய் எனப்படும்.
(vi) அவரை, துவரை முதலிய பயறு வகைகள் முதிரை எனப்படும்.

**9. தாவரங்களின் இளம் பயிர் வகைக்கான சொற்களை எழுதுக.**

(i) நெல், கத்தரி – நாற்று
(ii) மா, புளி, வாழை – கன்று
(iii) வாழையின் இளநிலை – குருத்து
(iv) தென்னையின் இளநிலை – பிள்ளை
(v) விளாவின் இளநிலை – குட்டி
(vi) பனையின் இளநிலை – மடலி (அ) வடலி
(vii) நெல், சோளம் இவற்றின் பசும்பயிர் – பைங்கூழ்

**10. கோதுமையின் வகைகள் யாவை?**

**கோதுமையின் வகைகள்:** சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை.

**11. ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்களை விளக்குக.**

**ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் :**

நெல், கேழ்வரகு – தாள்
கீரை, வாழை – தண்டு
நெட்டி, மிளகாய்ச்செடி – கோல்
குத்துச்செடி, புதர் – தூறு
கம்பு, சோளம் – தட்டு அல்லது தட்டை
கரும்பு – கழி
மூங்கில் – கழை



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



**12. தாவரத்தின் கிளைப் பிரிவுகளை விளக்குக.**

(i) தாவரத்தின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகள் கிளையாகும். அவை வெவ்வேறு சொற்களால் வழங்கப்படுகிறது. அடிமரத்திலிருந்து பிரியும் மாபெரும் கிளை **கவை** எனப்படும். கவையின் பிரிவுகள் **கொம்பு** அல்லது **கொப்பு** என வழங்கப்படும்.

(ii) கொம்பின் பிரிவு **கிளை** எனவும், கிளையின் பிரிவு **சினை** எனவும், சினையின் பிரிவு **போத்து** என்றும், போத்தின் பிரிவு **குச்சு** எனவும், குச்சியின் பிரிவு **இணுக்கு** எனவும் வழங்கப்படும்.

**சிறுவினா**

**1. தாவரங்களின் குலை வகைகள் எவ்வாறெல்லாம் வழங்கப்படுகிறது?**

(i) அவரை, துவரை இவற்றின் குலை கொத்து எனவும்,
(ii) கொடி முந்திரி குலை எனவும், வாழைக்குலை தாறு எனவும்,
(iii) சோளம், கேழ்வரகின் குலை கதிர் எனவும்,
(iv) நெல், தினை இவற்றின் கதிர் அலகு அல்லது குரல் எனவும்,
(v) வாழைத்தாற்றின் பகுதி சீப்பு எனவும் வழங்கப்படுகிறது.

**2. கெட்டுப்போன காய்களுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.**

(i) நுனியில் சுருங்கிய காய் சூம்பல்.
(ii) சுருங்கிய பழம் சிவியல்.
(iii) புழுபூச்சி அரித்த காய் அல்லது கனி சொத்தை.
(iv) சூட்டினால் பழுத்த பிஞ்சு வெம்பல்.
(v) குளுகுளுத்த பழம் அளியல்.
(vi) குளு குளுத்து நாறிய பழம் அல்லது காய் அழுகல்.
(vii) பதராய்ப் போன மிளகாய் சொண்டு.
(viii) கோட்டான் உட்கார்ந்ததால் கெட்டுப்போன காய் கூகைக்காய் அல்லது கோட்டான் காய்.
(ix) தேரை அமர்ந்ததால் கெட்ட காய் – தேரைக்காய்.
(x) தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய் அல்லிக்காய்.
(xi) தென்னையில் கெட்ட காய் – ஒல்லிக்காய்.

இவ்வாறு கெட்டுப்போன காய்கனி வகைகளுக்குத் தாவரத்திற்கேற்ப பெயர்கள் வழங்கப்படுகின்றன.

**3. பாவாணர் கட்டுரையில் கையாண்டுள்ள தமிழ்ச் சொல் வளங்களை விளக்குக.**

பாவாணர், தமிழ்ச் சொல்வளம் கட்டுரையில் வித்து வகை, வேர் வகை, அரித்தாள் வகை, காய்ந்த இலை வகை, இலைக்காம்பு வகை, பூமடல் வகை, அரும்பு வகை, பூக்காம்பு வகை, இதழ் வகை, காய் வகை, கனி வகை, உள்ளீட்டு வகை, தாவரக் கழிவு வகை, விதைத்தோல் வகை, பதர் வகை, பயிர் வகை, கொடி வகை, மர வகை, கரும்பு வகை, காய்ந்த பயிர் வகை, வெட்டிய விறகுத்துண்டு வகை, மரப்பட்டை வகை, பயிர்ச்செறிவு வகை, நிலத்தின் தொகுப்பு வகை, செய் வகை, நில வகை, நன்செய் வகை, வேலி வகை, காட்டு வகை ஆகியவற்றின் சொல்வளங்களையும் விளக்கியுள்ளார்.

☆ ☆ ☆

மொழி – அமுதஊற்று | கற்கண்டு

# இயல் 1 எழுத்து, சொல்

## கற்பவை கற்றபின்

**1. தேன், நூல், பை, மலர், வா – இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.**

(i) தேன் – சந்தியா தேன் வாங்கக் கடைக்குச் சென்றாள்.
(ii) நூல் – கண்ணன் பல நூல்களைக் கற்று புகழ்பெற்ற சிறந்த கவிஞராகத் திகழ்கிறார்.
(iii) பை – தியா இன்று துணிப்பையில் தன் புத்தகங்களை வைத்து பள்ளிக்குக் கொண்டு சென்றாள்.
(iv) மலர் – சுடர்விழி பல வண்ண மலர்களால் மேடையை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.
(v) வா – ஹரி, ஹாய்ஸ்ரீ இருவரும் என்னுடன் வாருங்கள்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



**2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.**

காண், சிரி, படி, தடு

**எ.கா. :** காட்சி, காணுதல், காணல், காணாமை

| | வினை அடி | தொழிற்பெயர் |
|---|---|---|
| (i) | காண் | காட்சி, காணுதல், காணல், காணாமை |
| (ii) | சிரி | சிரிப்பு, சிரித்தல், சிரிக்காமை |
| (iii) | படி | படிப்பு, படித்தல், படிக்காமை |
| (iv) | தடு | தடுப்பு, தடுத்தல், தடுக்காமை |

**3. தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

**அண்ணன்** : எங்கே செல்கிறாய் (தொடர்மொழி)
**தம்பி** : **கடைக்கு** (தனிமொழி)
**அண்ணன்** : **அங்கே என்ன** வாங்குகிறாய்? (தொடர்மொழி)
**தம்பி** : **தேங்காய் வாங்குகிறேன்.** (தொடர்மொழி)
**அண்ணன்** : **எதற்கு** (தனிமொழி)
**தம்பி** : **கோயிலுக்குச் செல்ல வேண்டும்.** (தொடர்மொழி)
**அண்ணன்** : **எந்தக் கோயிலுக்குச் செல்ல வேண்டும்?** (தொடர்மொழி)
**தம்பி** : **குன்றத்தூர்** (தனிமொழி)

**4. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.**

**இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|
| அழைக்கும் | அழைத்தல் |
| ஏறுவேன் | ஏறுதல் |
| அமர்வேன் | அமர்தல் |
| பார்ப்பேன் | பார்த்தல் |
| எய்தும் | எய்துதல் |

**5. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் – இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.**

(i) கட்டு – முதனிலைத் தொழிற்பெயர்
(ii) சொட்டு – முதனிலைத் தொழிற்பெயர்
(iii) வழிபாடு – முதனிலைத் தொழிற்பெயர்
(iv) கேடு – முதனிலை திரிந்த தொழிற்பெயர்
(v) கோறல் – விகுதி பெற்ற தொழிற்பெயர்

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது** பிடிஏ–1

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**விடை ஈ) வினையாலணையும் பெயர்**

**2. வெஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ – இச்சொற்களில் உள்ள அளபெடைகள்** பிடிஏ–6

அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை
ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை
ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

**விடை அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



3. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்** அ.மா.வி 2019

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
இ) செய்தித்தொடர் ஈ) கலவைத் தொடர்

**விடை ஈ) கலவைத்தொடர்**

4. **தொடர்மொழி -** காலாண்டுத் தேர்வு 2019

அ) ஆடு மேய்ந்தது ஆ) அருகில் இ) அம்மாஅ ஈ) அசையாமை

**விடை அ) ஆடு மேய்ந்தது**

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. **'ஓஒதல் வேண்டும்' என்பது எவ்வகை அளபெடையாகும்?**

அ) செய்யுளிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபடை

**விடை அ) செய்யுளிசை அளபெடை**

2. **செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் அளபெடுப்பது**

அ) ஒற்றளபடை ஆ) இன்னிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

**விடை ஆ) இன்னிசை அளபெடை**

3. **கீழ்க்கண்டவற்றில் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எது?**

அ) சுடு ஆ) சூடு இ) சுடுதல் ஈ) சுட்டவன்

**விடை ஆ) சூடு**

### குறுவினா

1. **செய்யுளிசை அளபெடை என்றால் என்ன?**

செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைவு செய்ய உயிர் நெடில் எழுத்துகள் ஏழும் நீண்டு ஒலிப்பது செய்யுளிசை அளபெடை எனப்படும். இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.

**சான்று :** ஓஒதல் வேண்டும் - மொழி முதல்
உறாஅர்க்கு உறுநோய் - மொழியிடை
நல்ல படாஅ பறை - மொழியிறுதி

2. **இன்னிசை அளபெடை என்றால் என்ன?**

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

**சான்று :** கெடுப்பதூஉம் , எடுப்பதூஉம்

3. **சொல்லிசை அளபெடை என்றால் என்ன?**

செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள்தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

**சான்று :** குடிதழீஇ, அடிதழீஇ (தழீ - தழுவுதல், தழீஇ - தழுவி)

4. **ஒற்றளபெடை என்றால் என்ன?**

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகள் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.

**சான்று :** எஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்
வெஃஃ குவார்க்கில்லை வீடு.

5. **அளபெடுக்கும் ஒற்றெழுத்துகள் யாவை?**

**அளபெடுக்கும் ஒற்றெழுத்துகளாவன:**

**மெய்யெழுத்துகள்:** ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்

**ஆய்த எழுத்து :** ஃ

6. **அளபெடுத்தல் என்றால் என்ன? அது எதற்குப் பயன்படுகிறது?**

(i) அளபெடுத்தல் - நீண்டு ஒலித்தல்.
(ii) பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



7. **சொல் என்றால் என்ன?**
ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருவது சொல் ஆகும்.

8. **மொழியின் வகைகள் யாவை?**
மொழி மூன்று வகைப்படும். (i) தனிமொழி (ii) தொடர்மொழி (iii) பொதுமொழி

9. **தனிமொழி என்றால் என்ன?**
ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது தனிமொழி எனப்படும். **சான்று :** கண், கண்ணன்

10. **தொடர்மொழி என்றால் என்ன?**
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.
**சான்று :** கண்ணன் வந்தான்.

11. **பொதுமொழி என்றால் என்ன?**
ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும்.
**சான்று :** தாமரை
தாமரை – மலர்
தா + மரை – தாவுகின்ற மான்

12. **தொழிற்பெயர் என்றால் என்ன?**
ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாக உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும். **சான்று :** ஈதல், நடத்தல்

13. **முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன?**
(i) தொழிற்பெயர் விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற்பெயராகும்.
(ii) **எ.கா :** தட்டு, உரை, இச்சொற்கள் தட்டுதல், உரைத்தல் என்று பொருள்படும்போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.

14. **முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன?**
(i) தொழிற்பெயரின் விகுதியைப் பெறாமல் முதனிலை திரிந்து (மாறுபட்டு) வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆகும்.
(ii) **சான்று:** கெடுவான் கேடு நினைப்பான்
(iii) இதில் 'கெடு' என்னும் முதனிலை 'கேடு' என்று மாறி வந்துள்ளமையால் இது முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

15. **வினையாலணையும் பெயர் என்றால் என்ன?**
ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.
**சான்று :** <u>வந்தவர்</u> அவர்தான்.
<u>பொறுத்தார்</u> பூமியாள்வார்.

16. **சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
சார்பெழுத்து பத்து வகைப்படும். அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்.

17. **அளபெடை என்றால் என்ன?**
நெடில் எழுத்துகள் நீண்டு ஒலிக்கும். அவ்வாறு அளபெடுக்கும் போது அதற்கு இனமான குறில் எழுத்துகள் அதன் பக்கத்தில் வரும். அளவு + எடை = அளபெடை.

18. **அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
அளபெடை இரண்டு வகைப்படும். அவை, (i) உயிரளபெடை, (ii) ஒற்றளபெடை.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



**19. உயிரளபெடை என்றால் என்ன?**

(i) செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைவுசெய்ய உயிர் நெடில் எழுத்துகள் ஏழும் நீண்டு ஒலிப்பது உயிரளபெடை எனப்படும்.

(ii) உயிர்நெடில் அளபெடுக்கும்போது அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் அதன் பக்கத்தில் வரும்.

**20. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை**

(i) செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை

(ii) இன்னிசை அளபெடை

(iii) சொல்லிசை அளபெடை

☆ ☆ ☆

## திறன் அறிவோம்

**பலவுள் தெரிக.**

**1. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –** அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**விடை ஈ) சருகும் சண்டும்**

**2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்** காலாண்டுத் தேர்வு 2019

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**விடை இ) எம் + தமிழ் + நா**

**3. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –** பிடிஏ–3

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய

இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

**விடை ஈ) பாடல்; கேட்டவர்**

**4. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை** பிடிஏ–4

அ) குலை வகை ஆ) மணி வகை

இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

**விடை ஆ) மணி வகை**

**குறுவினா**

**1. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.** பிடிஏ–2; காலாண்டுத் தேர்வு 2019

(i) வேங்கை என்பது தனிமொழியாகி மரத்தையும், புலியையும் குறிக்கும்.

(ii) வேம் + கை எனத் தொடர்மொழியாகப் பிரிந்து 'வேகின்ற கை' எனப் பொருள் தரும்.

(iii) இது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவதால் பொதுமொழியாக இருக்கிறது.

**2. 'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.** அ.மா.வி 2019

(i) சீவகசிந்தாமணி (ii) வளையாபதி (iii) குண்டலகேசி.

**3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

**சரியான தொடர்கள் :**

(i) ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

(ii) ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



**பிழையான தொடர் :** ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழைக்கான காரணம் :** தாறு என்பது வாழைக்குலையைக் குறிக்கும். சீப்பு என்பது அதில் அடங்கிய வரிசையான பழங்கள் ஆகும்.

**4. 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்' – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.** பிடிஏ–6; அரையாண்டுத் தேர்வு 2019

(i) உடுப்பதூஉம், உண்பதூஉம் – இன்னிசை அளபெடை வகையைச் சார்ந்தது ஆகும்.

(ii) **இலக்கணம் :** செய்யுளின் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

## சிறுவினா

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?** பிடிஏ–2

**தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள் :**

(i) தமிழ்மொழி பழமைக்குப் பழமையாய் உள்ளது.

(ii) கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து ஆட்சி செய்தது.

(iii) பாண்டிய மன்னனின் மகளாக வளர்ந்தது.

(iv) திருக்குறளின் பெருமைக்கு உரியதாய் விளங்குகிறது.

(v) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாக அமைந்துள்ளது.

(vi) நிலைத்து நிற்கும் சிலப்பதிகாரமாகவும், அழகான மணிமேகலையாகவும் விளங்குகிறது.

**2. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.' இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.** பிடிஏ–3; காலாண்டுத் தேர்வு 2019

(i) கண்ணன் வயலில் **நெல் நாற்றிற்குத்** தண்ணீர் பாய்ச்சினான்.

(ii) தாத்தா நிறைய **தென்னம்பிள்ளை**களை வாங்கி வந்தார்.

(iii) **கத்தரி நாற்றில்** வெட்டுக்கிளிகள் இருந்தன.

(iv) **மாங்கன்று** மழைக்குப் பிறகு தளிர் விட்டுள்ளது.

(v) வாழைமரத்தினடியில் **வாழைக்கன்றுகள்** உள்ளன.

**3. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | அறிதல் | தெரிந்தது | தெரிதல் |
| அறியாதது | அறியாமை | தெரியாதது | தெரியாமை |
| புரிந்தது | புரிதல் | பிறந்தது | பிறத்தல் |
| புரியாதது | புரியாமை | பிறவாதது | பிறவாமை |

## நெடுவினா

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.** பிடிஏ–5; அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019

அனைவருக்கும் வணக்கம்!

தமிழ்த்தாய் இன்று நேற்று பிறந்தவள் இல்லை. அவளுடைய புகழைப் பாடப் பாட இனிமை பிறக்கும். தமிழ்த்தாயைப் போற்றாத புலவரில்லை என்றால் அது மிகையாகாது.

மனோன்மணீயம் பெ.சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழ்த்தாயை வாழ்த்தியமையைப் பார்ப்போம்.

பெ. சுந்தரனார் அலைகடலை ஆடையாக அணிந்த பூமிப் பெண்ணிற்குப் பாரத கண்டம், முகமாகத் திகழ்வதாகக் கூறுகிறார். அம்முகத்திற்குத் தென்திசை நாடுகள் பிறைநிலவு போன்ற நெற்றியாகவும் அந்நெற்றியில் நறுமணம் மிக்க திலகமாய்த் தமிழகம் உள்ளதாய்க் கூறியுள்ளார். அதுமட்டுமல்லாமல் திலகத்தின் மணம் எல்லோரையும் இன்புறச் செய்வதுபோல் தமிழ்த்தாயும் எல்லாத் திசைகளிலும் புகழ்பெற்றவளாக இருப்பதாகக் கூறியுள்ளார்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



பெருஞ்சித்திரனார் தமிழைப் பழமைக்குப் பழமையாய்த் தோன்றியவள், குமரிக்கண்டத்தில் நிலைத்து நின்று அரசாளும் மண்ணுலகப் பேரரசு, பாண்டிய மன்னனின் மகள் என்றெல்லாம் குறிப்பிடுகிறார். பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் எல்லாத் திசைகளிலும் புகழ்பெற்றுத் திகழ்வதாகக் கூறியுள்ளார். அதனையே பெருஞ்சித்திரனார் திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும் பதினெண் மேல்கணக்கு, கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்களாய் எல்லாத் திசையிலும் பரவியுள்ளாள் என்று புகழ்ந்து கூறியுள்ளார். பொங்கியெழும் இந்நினைவுகளால் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் என்கிறார்.

உலகின் மூத்தமொழியாக இருந்தும் இன்றளவும் இளமையாக இருக்கின்றாள் என்று சுந்தரனார் பாடுகிறார். பெருஞ்சித்திரனார் இதனைப் பழமைக்குப் பழமை என்கிறார்.

சுந்தரனார் தமிழ்மொழியின் வளம் பெருகுகின்றதே தவிர குறையவில்லை என்கிறார். இதனைப் பெருஞ்சித்திரனார் தமிழ் பழம்பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டுள்ளது என்கிறார். மேலும் "வியக்கத்தக்க நீண்ட உன் நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன" என்கிறார்.

'சுந்தரனார் தமிழே! தமிழாகிய பெண்ணே! தாயே உன்னை வாழ்த்துகிறேன்' என்கிறார். பெருஞ்சித்திரனார், "எம் தனித்தமிழே! உள்ளத்தில் கனல் மூள, வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்" என்று பாடியுள்ளார்.

இவ்வாறு மனோன்மணீயம் பெ. சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழின் பெருமையைப் பறைசாற்றி வாழ்த்துகின்றனர்.

**2. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.** பிடிஏ–3

வணக்கம்!

**சொல்வளம் :**

(i) தமிழ்நாட்டுப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையவர்கள். எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும், நூலிலும் இலையைக் குறிக்க Leaf என ஒரே சொல் மட்டுமே உள்ளது.

(ii) ஆனால் தமிழ் மொழியில் அதன் வன்மை, மென்மையின் அடிப்படையில் தாள், இலை, தோகை, ஓலை எனத் தமிழர் பாகுபாடு செய்துள்ளனர்.

(iii) தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒரு பொருட் பலசொல் வரிசைகள் பிறமொழிகளில் இல்லை.

(iv) தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்கிறார் கால்டுவெல்.

**சொல்லாக்கத்திற்கான தேவை :**

(i) திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.

(ii) பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

(iii) அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்ட புதிய சொற்களுக்கான கலைச்சொல் வளத்தைப் பறை சாற்றுதல் அவசியமாகும்.

(iv) தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்கவும், தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் வேண்டுமாயின் புதிய சொல்லாக்கம் தேவை.

(v) பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை குறையும். அத்துடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்து அயல்மொழிச் சொற்களே நிலைபெற்றிட வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய நிலை ஏற்படாதிருக்க தமிழில் புதிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டும்.

(vi) நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் கருவிகள், வேளாண்மை, மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல் முதலான துறைகளுக்குப் பயன்படும் சொற்களைத் தமிழில் சொல்லாக்கம் செய்து நம் மொழியின் வளத்தைப் பெருக்க வேண்டும்.

நன்றி!



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



# மொழியை ஆள்வோம்

## மொழிபெயர்ப்பு

1. **If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart.** **– Nelson Mandela**

பிடிஏ–2; காலாண்டுத் தேர்வு 2019

**விடை:**

ஒரு மனிதனிடம் அவருக்குப் புரிகிற மொழியில் பேசினால் அவரது மூளையைச் சென்றடையும். ஆனால் அவருடைய தாய்மொழியில் பேசினால் அவரது இதயத்தைச் சென்றடையும். **– நெல்சன் மண்டேலா**

2. **Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going.** **– Rita Mae Brown**

காலாண்டுத் தேர்வு 2019

**விடை:**

கலாச்சாரத்தைக் காட்டுகின்ற பாதை மொழியாகும்; அதுவே மக்கள் எங்கிருந்து வந்தார்கள்; எங்குச் செல்கிறார்கள் என்பதைத் தெளிவுப்படுத்தும். **– ரீட்டா மே ப்ரௌன்**

## சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக

பிடிஏ–5

“தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே”

– கவிமணி தேசிக விநாயகனார்

**விடை:**

“தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை
தேறும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் – நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே”

## கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக

பிடிஏ–4

(குவியல், குலை, மந்தை, கட்டு)

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | குவியல் (கற்குவியல்) | புல் | கட்டு (புற்கட்டு) |
| பழம் | குலை (பழக்குலை) | ஆடு | மந்தை (ஆட்டு மந்தை) |

## வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக

1. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.**
கலையரங்கத்தில் எனக்காகக் **காத்திருக்கின்றவரை** அழைத்து வாருங்கள்.

2. **ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**
ஊட்டமிகு உணவு **உண்டவர்** நீண்ட வாழ்நாள் பெற்றார்.

3. **நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**
நேற்று என்னைச் **சந்தித்தவர்** என் நண்பர்.

4. **பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.**
பொது அறிவு நூல்களைத் தேடிப் **படித்தவர்** போட்டித் தேர்வில் வென்றார்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



## அதே பெயருடைய வேறு சொற்களை எழுதுக

**தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**

**1. உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.**

**பூமியில்** வாழும் **மாந்தருள்** சிலர் **பழமிருக்கக் காய் உண்ணுதலைப்** போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி **துன்பப்**படுகின்றனர்.

**2. வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.**

வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடிவந்த **கவிஞருக்குத்** தனது தலையை **ஈந்து** மங்காப் **பெருமை** பெற்றான்.

**3. நளனும் அவனது துணைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமுகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர்.**

நளனும் அவனது **மனைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**மேகம்** கண்ட **மயில்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

**4. சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.** பிடிஏ–1

**பூந்தோட்டத்தில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடி **தேன்** உண்டன.

**5. பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.**

**ஆ**போல் **அமைதியும் வேங்கை** போல் **வீரமும் களிறு** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

## கட்டுரை எழுதுக

குமரிக் கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

**இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**
அ.மா.வி 2019; பிடிஏ–1

### சான்றோர் வளர்த்த தமிழ்

"வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்
வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி"

என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். தமிழ் மூவாயிரம் ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்த இலக்கிய வளம் மிக்க மொழி. தமிழ் மிகவும் பண்பட்ட மொழி. அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருந்த மொழி.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" எனப் போற்றிப் புகழப்படுகின்ற தமிழ்மொழி உலகெங்கும் பரவியுள்ளது. இலக்கியங்களும் இலக்கணங்களும் பெருகி இருந்தமையால், தமிழ்மொழி திருந்திய மொழியாகத், திருத்தம் செய்யப்பட்ட மொழியாக, ஒழுங்குபடுத்தப்பட்ட மொழியாகச் சிறப்புற்று விளங்குகிறது. பண்டைத் தமிழை அறிந்து கொள்ள தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் உதவுகின்றன. இடைக்காலத் தமிழை அறிந்துகொள்ள பக்தி இலக்கியங்கள் உதவுகின்றன. இவ்விலக்கியங்கள் மக்களின் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துகின்றன. ஆதலால் இவை 'மக்கள் இலக்கியம்' என்றே வழங்கப்படுகின்றன.

'ஏடு காத்த ஏந்தல்' என்ற சிறப்பிற்குரிய தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் இல்லையெனில் தமிழ் இலக்கியங்களை எவரும் அறிந்திருக்க இயலாது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, காப்பியங்கள் என அனைத்தையும் அச்சிட்டுத் தம் பதிப்புப் பணியினால் தமிழுக்கு அழகூட்டியுள்ளார்.

சூரிய நாராயண சாஸ்திரிகள் என்ற பெயரைப் பரிதிமாற்கலைஞராக மாற்றிக் கொண்ட தமிழறிஞர் தமிழ்மொழியை உயர்தனிச்செம்மொழி என்று முதன்முதலாக நிலைநாட்டிய பெருமைக்குரியவர். மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கம் உருவாக்கி தமிழை வளர்த்தவர்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



தேவநேயப் பாவாணர், தமிழே உலகின் அடிப்படையான செம்மொழி என்பதற்கான மிகச் சிறந்த வாதங்களை முன் வைத்த தமிழறிஞர். இவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் பல. மு.வரதராசனார், மீனாட்சி சுந்தரனார், ச.வையாபுரிப் பிள்ளை ரா.பி.சேதுப்பிள்ளை எனப் பலராலும் கன்னித் தமிழாய் விளங்கும் தமிழன்னை வளர்க்கப்பட்டாள்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத வீரமாமுனிவர், ஜி.யூ.போப், கால்டுவெல் போன்றோர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியது.

தமிழ்மொழியில் உள்ள நீதிநூல்கள், பதினெண்மேல்கணக்காகிய சங்க இலக்கியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள், பள்ளு, குறவஞ்சி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், பரணி, உலா, அந்தாதி எனத் தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்கள் தமிழன்னைக்கு அணிகலன்களாய் விளங்கி அழகூட்டுவதற்குப் பலரும் பணியாற்றியுள்ளனர்.

தமிழன்னைக்கு அணிகலன்களாய் விளங்கும் நூல்களைப் படிப்போம். இன்புறுவோம். புதிய அணிகலன்களை உருவாக்கி அழகுக்கு அழகு சேர்ப்போம்.

## நயம் பாராட்டுக

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே**
**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே**
**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே.**

– கா. நமச்சிவாயர்

**திரண்ட கருத்து :**

தேனை விட இனிமையான செந்தமிழ் மொழியே! தென்னாடு பெருமை பெறும்படி விளங்கும் தென் மொழியே! உடம்பில் ஒளிவிட்டு விளங்குகிற உயர்ந்த மொழியே! உணர்வுக்கு உணர்வு தந்து ஒளிருகின்ற தமிழ் மொழியே! சிறப்பினால் வானத்தை விட உயர்ந்த வண்டமிழ் மொழியே! மனிதர்களுக்கு இரண்டு கண்களாக விளங்கும் நல்ல மொழியே! தானாகவே சிறப்புற்று விளங்குகின்ற தனித்தமிழ் மொழியே! இனியும் தழைத்து இனிது உயர்வாயாக.

**மையக் கருத்து:**

தமிழ்மொழியின் சிறப்புகளை இனிமையான மொழி, உணர்வுக்கே உணர்வைத் தரும் மொழி, இரு கண்களாய் விளங்கும் மொழி என்று கூறுகிறார். இனியும் தமிழ் மொழி தழைத்து வளரும் என்கிறார்.

**மோனைத் தொடை :** தேனினும் – தென்னாடு, தானனி – தழைத்தினி
ஊனினும் – உணர்வினும் – சீர்மோனை

**எதுகைத் தொடை :** தேனினும், ஊனினும், வானினும், தானனி – அடி எதுகை

**இயைபுத் தொடை :** மொழியே

**அணிநயம் :** உயர்வு நவிற்சி அணி. உள்ளதை உள்ளவாறு கூறாமல் பன்மடங்கு உயர்வாகப் பெருக்கிக் கூறியுள்ளார்.

## மொழியோடு விளையாடு

### சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

காலாண்டுத் தேர்வு 2019

தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

எ.கா. பூமணி

**விடை:**

| | | | |
|---|---|---|---|
| (i) | தேன்மழை | (vi) | செய்வான் |
| (ii) | மணிமேகலை | (vii) | பூமழை |
| (iii) | பொன் விலங்கு | (viii) | பொன்மணி |
| (iv) | வான்மழை | (v) | செய்விளக்கு |



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



## வினாத்தொடர்கள் அமைக்க

**குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத் தொடர்கள் அமைக்க.**

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்

எ.கா. குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

1. **சுவைக்காத இளநீர்**
   சுவைக்காத இளநீர் ஏதாவது உண்டா?
2. **காப்பியச் சுவை**
   காப்பியச்சுவை இல்லாத தமிழ் காப்பியமா?
3. **மனிதகுல மேன்மை**
   மனிதகுல மேன்மையைப் போற்றாத இலக்கியம் தமிழில் உண்டா?
4. **விடுமுறைநாள்**
   விடுமுறைநாளில் விளையாடாத மாணவர்கள் உண்டா?

## எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை. | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி பிடிஏ–2 | நான்கு, இரண்டு | ச உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | கூ |

## அகராதியில் காண்க

| | | | |
|---|---|---|---|
| 1. அடவி | – காடு, சோலை | 4. செறு | – சிறு வயல், கோபம் |
| 2. அவல் | – நெல் இடியல், பள்ளம் | 5. பழனம் | – வயல், பொய்கை |
| 3. சுவல் | – மேடு, முதுகு | 6. புறவு | – காடு, புறா |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



பிடிஏ–1, அரையாண்டுத் தேர்வு 2019

**புத்தகம்**

அறியாமை தடைகளைத் தாவி
அறிவைக் கூராய் சீவி
உண்மைகளை உரக்கக் கூவி
சிந்தனையைத் திறக்கும் சாவி.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book order Online or Available at All Leading Bookstores



## செயல் திட்டம்

1. **நீங்கள் வாழும் பகுதியிலுள்ள எவையேனும் ஐந்து பயிர்வகைச் சொற்களுக்கான படத்தொகுப்பை உருவாக்குக.**

(i) பச்சைப் பயிறு
(ii) காராமணி
(iii) உளுந்து
(iv) கம்பு
(v) சோளம்



## நிற்க அதற்குத் தக

| இன்சொல் வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?**
**விடை :** இன்சொல் வழி. என் நண்பருக்குக் காட்டும் வழி இன்சொல் வழி.

## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. Vowel - உயிரெழுத்து பிடிஏ–1 | 4. Monolingual - ஒரு மொழி |
| 2. Consonant - மெய்யெழுத்து | 5. Conversation - உரையாடல் |
| 3. Homograph - ஒப்பெழுத்து பிடிஏ–1 | 6. Discussion - கலந்துரையாடல் |

## அறிவை விரிவு செய்

1. நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் – முனைவர் சேதுமணி மணியன்
2. தவறின்றித் தமிழ் எழுதுவோம் – மா. நன்னன்
3. பச்சை நிழல் – உதயசங்கர்

☆ ☆ ☆



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com